Fach- und Kontaktstelle
Spielgruppen Kanton Bern

# பெற்றோருக்கான தகவல்

## குறைவான கட்டணத்தில் பிள்ளைகளை விளையாட்டுக் குழுவிற்கு(Spielgruppe)அனுப்புதல்.

பிள்ளைகள் சிறுவயதிலேயே கல்வி கற்பதற்கு விளையாட்டுக்குழுவிற்கு செல்வது அவசியமாகும். பேர்ண் நகரம் வருமானம் குறைந்த குடும்பத்தினருக்கு அவர்களின் பிள்ளைகள் விளையாட்டுக் குழுவிற்கு செல்ல உதவி செய்கின்றது.

விளையாட்டுக்குழுவிற்கு பிள்ளைகள் செல்வதற்கான உதவித்தொகையானது மாதாந்த வைத்திய காப்புறுதிக் கட்டணத்திற்கான உதவித்தொகையில் (Prämienvergünstigung) தங்கி உள்ளது.

**குறைவான கட்டணத்தில் விளையாட்டுக் குழுவிற்குச் செல்வதற்கான தேவைகள்.**

- உங்கள் பிள்ளை எற்கனவே வாரத்தில் இரண்டு நாட்கள் விளையாட்டுக் குழுவிற்குச் செல்கிறது அல்லது உங்கள் பிள்ளையை வாரத்தில் இரு நாட்கள் விளையாட்டுக் குழுவிற்கு குறைந்த கட்டணத்தில் அனுப்ப முடியும்.
- நீங்கள் பேர்ண் நகரத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- சமூக பாதுகாப்பு உதவித் தொகையினைப் (Sozialhilfe) பெறாதிருத்தல் வேண்டும். சமூக பாதுகாப்பு உதவித் தொகையினைப் பெறும் குடும்பத்தினருக்குப் பிள்ளையின் விளையாட்டுக் குழு கட்டணத்தினை சமூக பாதுகாப்பு அலுவலகம் (Sozialdienst) செலுத்தும்.
- நீங்கள் மாதாந்த வைத்தியக் காப்புறுதி உதவித்தொகையாக ஆகக்கூடியது மாதாந்தம் 200 ல் இருந்து 150, 107 அல்லது 67 பிராங்குகள் பெறுபவராக இருக்க வேண்டும். நீங்கள் இதனை, பேர்ண் மாநில சமூக காப்புறுதி நிறுவனத்திடம் கடிதத்தினைப் பெற்று உறுதிப்படுத்த வேண்டும். (பிரத்தியேக உதாரணங்களைப் பார்க்கவும்).
- உங்கள் பிள்ளை செல்லும் விளையாட்டுக் குழு, விளையாட்டுக் குழுவிற்கான துறைசார் தொடர்பு நிறுவனத்தில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

## நீங்கள் உதவித் தொகையைப் பெற என்ன செய்ய வேண்டும்.

- விளையாட்டுக்குழு நடத்தினரிடம் விண்ணப்பப் படிவத்தினை பெறவேண்டும்.
- அதனை நிரப்ப வேண்டும்.
- விண்ணப்பப் படிவத்தினை மாநில சமூக காப்புறுதி நிறுவன உறுதிப்படுத்தல் கடிதத்துடன், பிள்ளை விளையாட்டுக் குழுவிற்குச் சென்று நான்கு கிழமைகளுக்கிடையில் கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**FKS Spielgruppen Kanton Bern**
**Kontaktstelle Stadt Bern**
**Kontaktstelle Bern, Administration**
**Claudia Wälti**
**Juraweg 3**
**3293 Dotzigen**

விளையாட்டுக் குழுவிற்கான துறைசார் தொடர்பு நிறுவனம் உங்கள் விண்ணப்பப் படிவத்தினை ஆராய்ந்து, உங்கள் பிள்ளை குறைந்த கட்டணத்தில் விளையாட்டுக் குழுவிற்குச் செல்ல முடியுமா எனவும், எவ்வளவு தொகையினை குறைந்த கட்டணாமாக செலுத்த முடியும் எனவும், உங்களுக்கும் உங்கள் பிள்ளை செல்லும் விளையாட்டுக் குழுவிற்கும் அறிவிப்பார்கள். அதன் பின் விளையாட்டுக் குழு நடத்துனர் உங்களுக்கு குறைந்த கட்டணத்திற்கான பணம் கட்டும் சீட்டினை உங்களுக்கு அனுப்புவார்கள்.

கேள்விகள் இருப்பின் கீழ் கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

FKS Spielgruppen Kanton Bern, Kontaktstelle Stadt Bern
Tel. 079 517 96 88
Email: bern@fks-be.ch

விளையாட்டுக் குழுக்களுக்கான துறைசார் தொடர்பு நிறுவனத்தில் அங்கத்தவர்களாக உள்ள விளையாட்டுக் குழுக்கள், சிறுவர்கள் குறைந்த கட்டணத்தில் விளையாட்டுக் குழுவிற்குச் செல்வதற்கான, பேர்ண் நகர சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் வேண்டுகோளை நிறைவேற்றுகிறது.